2. அறிவிப்புகள்.

(1) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டப்படி பணச் சட்டமுன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவையின் பரிந்துரைக்காக பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு கீழ்க்கண்ட சட்டமுன்வடிவுகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன் :—

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகளில் வழங்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/1981).

(2) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம் ரத்து) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 1/1981).

(2) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று காலையில் கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு முடிவெடுக்கப்பட்டது :—

இன்று காலை நிகழ்ச்சிகள் வினாக்களும்—விடைகளும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை கலைந்து மீண்டும் பிற்பகல் 3-30 மணிக்கு அரசினர் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்வதற்காகக் கூடும். அவ்வமயம், "கிராம அலுவலர்கள் பதவி நீக்கச் சட்டமுன்வடிவு" முதலில் எடுத்துக்கொள்ளப்படும்.

2—3—1981—அரசு சட்டமுன்வடிவுகள்.

3—3—1981 }
4—3—1981 } —கூட்டம் இல்லை.

5—3—1981—தமிழ் நாட்டில் நிலவும் வறட்சி நிலை குறித்து விவாதம்.

6—3—1981—அரசு சட்டமுன்வடிவுகள்.

7—3—1981—தனி உறுப்பினர் அலுவல்கள்.

8—3—1981—ஞாயிறு—விடுமுறை.

9—3—1981 }
10—3—1981 } —அரசு சட்டமுன்வடிவுகள்.

மேலவை, வழக்கம்போல், காலை 10-30 மணிக்குக் கூடும்.